

ஆஸ்திரேலியாவின் ஹோபார்ட் நகரத்தில் உள்ள டாஸ்மானியா வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் 25.7.2024 அன்று வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் பல்துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடல் மற்றும் தொழில் நுட்பங்கள் தொடர்பான கருத்து பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசின் வேளாண்மை – உழவர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் செல்வி. அபூர்வா, கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழக துணை வேந்தர் முனைவர். வி.கீதாலெட்சுமி, நீர் மற்றும் புவியியல் ஆய்வு மைய இயக்குநர் முனைவர். பழனிவேலன், இயக்குநர் (ஆராய்ச்சி) முனைவர். எம். ரவீந்திரன், டாஸ்மானியா பல்கலைக் கழக பிரதிநிதிகளாக பேராசிரியர் மைக்கேல்ரோஸ், பேராசிரியர் அலிஸ்டர்கிரேசி, பேராசிரியர் ராபர்ட்ஷெல்லி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு அரசு மேல்நிலைப் பள்ளியில் நேற்று (27.07.2024) STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையத்தினை (STEM Innovation and Learning Center) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, இஸ்ரோ முன்னாள் இயக்குநர் பத்மஸ்ரீ. டாக்டர். மயில்சாமி அண்ணாதுரை முன்னிலையில் திறந்து வைத்து பார்வையிட்டார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி, அமெரிக்கன் இந்தியா ஃபவுண்டேஷன் டிஜிட்டல் ஈக்வலைசர் தலைவர், டாக்டர்.பாஸ்கரன் தீனதயாளன், முதன்மை கல்வி அலுவலர் பாலமுரளி ஆகியோர் உள்ளனர்.

### நாளை (29ஆம் தேதி) பொதுக்குழு உறுப்பினர்கள்

# அ.மகாதேவன் - காரை இரா.செழியன் நினைவுதினம்!

### அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் தி.மு.க.வினர் மலர் அஞ்சலி!

சிவகங்கை, ஜுலை 28 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரைச் சேர்ந்தவர் அ.மகாதேவன் இவர் ஒன்றிய செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர்.

சிவகங்கை மாவட்டத்தில் கழகத்தின் வளர்ச்சிக்காக தீவிர பணியாற்றிய கழக முன்னோடி ஆவார். இவர் 2013 ஆம் ஆண்டு ஜுலை 29ஆம் தேதி மறைவெய்தினார். ஒவ்வொரு ஆண்டும் மகாதேவன் நினைவுதினம் சூலை மாதம் 29ம்தேதி தி.மு.க சார்பில் அனுசரிக்கப்படுகிறது.

நாளை (29ஆம் தேதி திங்கட்கிழமை) அ.மகாதேவ னின் 11வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு காலை 9 மணி அளவில் திருப்பத்தூரில் அவரது இல்லத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சரும், சிவகங்கை மாவட்ட கழக செயலாளருமான கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் அ.மகாதேவன் திருவுருவப்படத்திற்கு தி.மு.க.வினர் மலர் அஞ்சலி செலுத்துகிறார்கள் ..

இதேபோல் திருப்பத்தூர் ஒன்றிய கழக செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர் காரை.இரா.செழியன். இவர் 2018 ம்ஆண்டு சூலை 29ம்தேதிமறைவெய்தினார். இவரது 6வது ஆண்டு நினைவுநாள் நாளை (திங்கட்கிழமை 29ம் தேதி) காரையூரில் அனுசரிக்கப்படுகிறது. .

காலை10.00மணி அளவில் காரையூரில் இரா. செழியன் படத்திற்கு கூட்டுறவுத்துறை அமைச்சரும், மாவட்டக் கழக செயலாளருமான கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மலர் அஞ்சலி செலுத்துகிறார்கள்.

### கர்நாடக மாநிலத்தில்

# உயிரிழந்த ஓட்டுநர் குடும்பத்திற்கு நிவாரண நிதி!

### சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் வழங்கினார்!

கிருஷ்ணகிரி, ஜுலை 28-

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை உள்வட்டம், எம்.வெள்ளாப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த முருகன் என்பவர் கடந்த 16.07.2024 அன்று LPG டேங்கர் லாரியில் ஓட்டுநராக சென்றபோது கர்நாடகா மாநிலம், வடகன்னட மாவட்டம், அங்கோலா வட்டம், சிரூரு பகுதியில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் காட்டாற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார்.

இந்த விபத்தில் உயிரிழந்த லாரி ஓட்டுநர் முருகன் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் அவர்கள் ஆறுதல் தெரிவித்ததோடு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 இலட்சம் வழங்க 25.07.2024 அன்று உத்தரவிட்டார். அதனைத்தொடர்ந்து, கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு, ஆகியோர் லாரி ஓட்டுநரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி, அவரது மனைவி செவ்வந்தி அவர்களிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார்கள். மறைந்த முருகன் அவர்களுக்கு திவ்யஸ்ரீ என்கிற மகளும், மேகன் என்ற மகனும் உள்ளனர். இந்நிகழ்வில், மாநில மகளிர் ஆணைய குழு உறுப்பினர் மரு.மாலதி, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ரஜினிசெல்வம், ஊத்தங்கரை ஒன்றிய குழு தலைவர் உஷாராணி குமரேசன், ஊத்தங்கரை பேரூராட்சி தலைவர் அமானுல்லா, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கதிரவன், மற்றும் ஒன்றிய கழக செயலாளர் சாந்தமூர்த்தி, பேரூர் கழக பொறுப்பாளர் பார்த்திபன், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட செங்குன்றம் – சோழவரம் பகுதிகளில்

# சசிகாந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிக்கை!



சென்னை, ஜுலை 28-

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட செங்குன்றம் பேரூர் மற்றும் சோழவரம் தெற்கு ஒன்றியம் இன்று (28.07.2024 -ஞாயிற்றுக்கிழமை) காலை 08.00 மணியளவில் செங்குன்றம் பகுதியிலிருந்து திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில் நன்றி தெரிவிக்கும் இந்நிகழ்ச்சி சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆகிய எனது தலைமையில் திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி பார்வையாளர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் இரா.கிரிராஜன் எம்.பி. மற்றும் மாதவரம் தொகுதி பொறுப்பாளர் ந.சந்திரபாபு முன்னிலையிலும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

அதுசமயம் இந்நிகழ்ச்சியில் இந்தியா கட்சி கூட்டணி நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இந்நிகழ்ச்சியில் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி தெரிவிக்கும் இடங்கள் மற்றும் நேரம் வருமாறு:

செங்குன்றம் பேரூர்

காலை 8 - செங்குன்றம் ஜி.என்.டி. ரோடு பெரியார் சிலையிலிருந்து கூட்ரோடு வரை

சோழவரம் தெற்கு ஒன்றியம்

காலை 9.00 - கும்மனூர், காலை 09.30 - பெருங்காவூர், காலை 10.00 - பூதூர்,

காலை 10.30 - ஓரக்காடு, காலை 11.00 நெற்குன்றம்,

காலை 11.15 - சோத்துப்பெரும்பேடு, காலை 11.30 - காரனோடை, காலை 11.45 - ஆத்தூர், பிற்பகல் 12.00 - புதிய எருமைவெட்டிப்பாளையம், பிற்பகல் 12.15 - பழைய எருமை வெட்டிப்பாளையம், பிற்பகல் 12.30 - சோழவரம், பிற்பகல் 12.45 - ஆங்காடு, பிற்பகல் 01.00 - பாடியநல்லூர், பிற்பகல் 01.30 - நல்லூர், பிற்பகல் 02.00 - அலமாதி.

இவ்வாறு சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தெரிவித்துள்ளார்.

### ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### கம்பம் பெ.செல்வேந்திரன் சிறப்புரை! மாவட்ட செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் வரவேற்புரை!

கன்னியாகுமரி. ஜுலை 28 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று (27.7.2024 -சனிக்கிழமை) அன்று காலை நாகர்கோவில், வடசேரி, அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கம் அருகில் வைத்து நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம் பெ.செல்வேந்திரன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் வரவேற்புரையாற்றி பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து கோஷங்கள் முழங்கினார்.

நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார். நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி செயலாளர் இ.ஜவஹர் நன்றியுரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என். தில்லைசெல்வம், சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் வி.ஜோசப் ராஜ், வர்த்தக அணி இணைச் செயலாளர் என்.தாமரை பாரதி, அமைப்புச் சாரா ஓட்டுநர் அணித் துணைச் செயலாளர் எம்.சிவராஜ், மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரத்தினம், மாவட்ட துணை செயலாளர் ஏ.ஆர்.பூதலிங்கம்பிள்ளை, மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர். சதாசிவன், ரா.பார்த்தசாரதி, பொதுக்குழு உறுப்பினர்கள் ம. ஜோசப்ராஜ், செ.காதர்ரஹ்மான், எ.எல்டபோன்ஸ் உட்பட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பலர் கலந்து கொண்டு கண்டனக் குரல் எழுப்பினர்.



கோவை தெற்கு மாவட்டம், ஆனைமலை வடக்கு ஒன்றியம், சுங்கம் கிளை கழகத்தில் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். கோவை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ். சபரி கார்த்திகேயன் தலைமை வகித்தார். ஆனைமலை வடக்கு ஒன்றிய செயலாளர் யுவராஜ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் நிசாந்த், சபரி கிருஷ்ணன் முன்னிலையில் இளைஞரணி உறுப்பினர்கள் சேர்ந்தனர். இதில் மருதமுத்து, திருநாவுக்கரசு, மைதீன், மனோஜ்குமார், அழகிரி, ஜெய்லானி, சதாம் உசேன், கார்த்தி, தினேஷ், அஸ்வின் பாலா மற்றும் இளைஞரணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

### குளித்தலை 16வது வார்டு

### கழகச் செயலாளர்

# ஏ.சுரேஷ் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

கரூர், ஜுலை 28-

கரூர் மாவட்டம், குளித்தலை நகராட்சி, 16வது வார்டு கழகச் செயலாளரும், 16வது வார்டு குளித்தலை நகர் மன்ற உறுப்பினருமான ஏ.சுரேஷ் (வயது 53) அவர்கள் 27.07.2024 அன்று சனிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் மாரடைப்பு ஏற்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவரது மனைவி பெயர் எஸ்.சுமதி (வயது 42). மகள் எஸ்.காவியா (வயது 22), மகன் எஸ்.கதிர் (வயது 17) உள்ளனர்.

இவர் 2006 முதல் குளித்தலை நகர கழகத்தில் பிரதிநிதியாகவும், 2019 முதல் 16வது வார்டு கழகச் செயலாளராகவும், 2022 முதல் குளித்தலை 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் அறிந்ததும் கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுப்பட்டி மிசா சொக்கலிங்கம்

### ஜுலை 28 (2007)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, சிறுவயது முதலே திராவிட இயக்கத்தில் பற்றுடையவராகவும், கழகம் துவக்கப்பட்ட காலத்தில் கழகத்தின் வளர்ச்சிக்கும் பாடுபட்டவர்.

திருப்பத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளராக பலமுறை பொறுப்பு வகித்தவர்.

பழைய முகவை மாவட்ட கூட்டுறவு வங்கியின் இயக்குநராகவும், கழக ஆட்சிக்காலங்களில் பல்வேறு பொறுப்புகளையும் வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, மதுரை மத்திய சிறையில், மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லை வே.ஆழ்வார்

### ஜுலை 28 (2008)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

தொடர்ந்து பத்து ஆண்டுகளாக திருநெல்வேலி நகரச் செயலாளராகவும், கழகத்திற்கு சோதனை ஏற்பட்டபோது நகர பொறுப்பாளராகவும், பின்னர் பொதுக்குழு உறுப்பினராகவும் கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.

திருநெல்வேலி நகர்மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய பல போராட்டங்களிலும் பங்கேற்றதோடு மட்டுமல்லாமல் குறிப்பாக, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**